## மூத்த வழக்கறிஞர்கள் - ஓய்வு பெற்ற நீதியரசர்கள் பாராட்டிய ‘சிலந்தி’ கட்டுரையில் வெளிவந்த

# முரசொலி செல்வத்தின் எண்ணத்தை தீர்ப்பாக அளித்த மதுரை உயர்நீதிமன்றம்!

கடந்த 10.10.2024 அன்று அண்ணா அறிவாலயத்தில் நுழைந்ததும், ஒரு அதிர்ச்சியான செய்தி இடி விழுந்தது போல கிடைத்தது. அதுதான் முரசொலி செல்வம் அவர்கள் மாரடைப்பு காரணமாக தூக்கத்திலே அவருடைய உயிர் பிரிந்தது என்று. இச்செய்தியை கேட்டு நம்பவும் முடியவில்லை தாங்கிக்கொள்ளவும் முடியவில்லை.

இச்செய்தி கேட்டு துடிதுடித்துப் போன நான், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்தில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு, உடனடியாக கோபாலபுரம் விரைந்தேன். அங்கே கண்களில் நீர்த் திவலைகளுடன் சோகமாய் அமர்ந்திருந்த தளபதி அவர்களின் முகத்தை கண்ட எனக்கு, துக்கம் தாங்கமுடியால் அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் கதறி அழுதுவிட்டேன்.

பொதுச்செயலாளர் அண்ணன் துரை முருகன் அவர்களும், அமைச்சர் க.பொன்முடி அவர்களும் எனது கைகளைப் பற்றிக் கொண்டு ஆசுவாசப்படுத்தினர். நான், துக்கம் தொண்டையை அடைத்திருந்த சோகத்தில் அமர்ந்திருந்த அந்த நேரத்தில் 50 ஆண்டு காலமாக முரசொலி செல்வம் அவர்களுடன் எனக்கிருந்த தொடர்புகள் - அளவளாவிய உரையாடல்கள் எல்லாம் என் மனதில் நினைவலைகளாக தோன்றின.

70களில் அவர் சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்ற கழகத்தினுடைய அமைப்பாளராக இருந்த காலத்தில், மாணவர் திமுக சார்பில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் என்னுடைய நினைவுக்கு வந்தன. குறிப்பாக இன்றைய அண்ணா அறிவாலயம் இருக்குமிடத்தின் பக்கத்திலிருந்த திருமண மண்டபத்தில் தான் அண்ணன் முரசொலி மாறனுக்கும் திருமண நடந்தது. அதே மண்டபத்தில் நடைபெற்ற முரசொலி செல்வம் அவர்களின் திருமணத்திலும் கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். அந்த நினைவுகள் எல்லாம் என் மனதில் நிழலாடியது. முரசொலி செல்வம் அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று மாலை நடைபெற்ற அந்த திருமண நிகழ்ச்சியில், பேரறிஞர் அண்ணா எதிரெதிர் துருவங்களான மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார் போன்ற மாபெரும் தலைவர்கள் ஒரேநேரத்தில் கலந்து கொண்ட அந்த காட்சி எல்லாம் என் நெஞ்சில் நிழலாடியது.

அதே திருமண மண்டபத்தில்தான், திமுக சார்பில், அண்ணன் முரசொலி செல்வம் அவர்களது முயற்சியால் “சென்னை மாவட்ட மாணவர் மாநாடு நடைபெற்றது. அம்மாணவர் மாநாட்டில் அன்றைய மாணவனாகிய நானும், என்னைப் போன்ற மாணவர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு, அதில் உரையாற்றிய காட்சிகள் எல்லாம் நினைவு வந்தது. அன்றைக்கு அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் அந்த மாநாட்டிலே பம்பரமாய் சுற்றிச் சுழன்று பணியாற்றிய காட்சிகள் என்றும் கண் முன்னே வந்து வந்து போனது.

அதனை தொடர்ந்து பல நிகழ்ச்சிகளில் அவரோடு, குறிப்பாக எம்ஜிஆர் பிரிந்த நேரத்தில் சட்டப்பேரவையில் நம்முடைய கழகத்தின் சார்பில் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்ந்திருந்த கே.ஏ.மதியழகன் அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்களோடு சேர்ந்து கொண்டு திமுக ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, தனித் தீர்மானத்தை கொண்டு வந்து, முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி கலைக்க முயற்சி செய்த போது, அதனை முறியடிக்க ஆயத்தப் பணிகளை செய்து கொண்டு, சபையிலே வந்து அமர்ந்த கலைஞர் அவர்களின் சாமர்த்தியத்தால்தான் அது தவிர்க்கப்பட்டது.

இந்நிகழ்வு நடைபெற்ற மறுநாள் தி.மு.க.விலிருந்து கொண்டே துரோகம் செய்த மதியழகனைக் கண்டித்து, அவர் இல்லம் நோக்கி மறியல் செய்ய புறப்பட்டபோது, அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் ஏற்பாட்டில் தி.மு.க. மாணவர் மன்றம் சார்பில் “பேரவைத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகக் கோரி” மறியல் செய்திட வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்.

இந்த அறப்போராட்டத்தில் நான் மற்றும் அன்றைய மாணவர்கள் எல்லாம் கலந்து கொள்ள இன்றைக்கு சிம்சன் அருகில் உள்ள பெரியார் சிலை இருக்கிற இடத்தில் ஒன்றுகூடினோம்.

அப்போது, கலைஞர் தலைமையிலான கழக அரசு இருந்தாலும், கழக மாணவர்களாகிய எங்களையெல்லாம் கைது செய்தது கழக அரசின் காவல்துறை. கைது செய்தவுடன் மாலை எங்களை விடுவித்து விடுவார்கள் என்று எண்ணியிருந்தோம்.

ஆனால்,“சபாநாயகர்வீட்டைமுற்றுகையிட்டு மறியல் போராட்டம் செய்திட திட்டமிட்டு இருந்ததால் அவர்களை கைது செய்யாமல் விடுவது முறையாகாது” என்று சொல்லிய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர், எங்களை சென்னை மத்திய சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதன்பிறகு ஒருநாள் கழித்து சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டோம். இதுபோன்ற பல நிகழ்கள் அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடன். அவற்றையெல்லாம் கூற வேண்டுமானால் பக்கங்கள் போதாது.

**தேர்தல் நேரத்தில், அண்ணா சாலையில் இருந்த ஆயிரம் விளக்கு பகுதியில் இருந்த பழைய முரசொலி அலுவலகத்தில் அண்ணன் செல்வம் அவர்களுடன் மாணவர்களாகிய நாங்கள் எல்லாம் கலந்து உரையாடிய பல நிகழ்வுகள் மற்றும் சென்னை புதுக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவனாக நான் இருந்தபோது, இரவு நேரத்தில் அண்ணன் முரசொலி செல்வம் அவர்களை நேரில் சந்தித்து பேசி விட்டு போனதும், இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகள் எல்லாம் என்னுடைய நினைவுக்கு வந்தன.**

1976ல்எமர்ஜென்சிநேரத்தில்முத்தமிழறிஞர் கலைஞருடைய பிறந்தநாளான ஜூன் மூன்றாம் தேதி அன்று கலைஞருடைய கடிதம் வெளிவர வேண்டும். அதற்காக ஜூன் 1ஆம் தேதி கலைஞர் ஒரு கடிதம் எழுதி அண்ணாவுக்கும் கலைஞருக்கும் இருந்த தொடர்பை மட்டுமே குறிப்பிட்டு எழுதி, அந்த கடிதத்தை, அப்போது அமலில் இருந்த பத்திரிகை தணிக்கை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. அக்கடிததில் “உடன்பிறப்பே” வார்த்தை மற்றும் “மு.க.” என்ற வார்த்தையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சென்சார் அதிகாரிகள் நீக்கி அனுப்பி விட்டார்கள்.



இதனை ஒன்றாம் தேதியன்று இரவு பார்த்த கலைஞர் மிகவும் கோபப்பட்டு, இந்த அக்கிரமத்தை அநியாயத்தை எதிர்த்து போராட வேண்டும் என்று எமர்ஜென்சி நேரத்திலே திமுகவினுடைய மூத்த தலைவர்கள் பலபேரும் மிசாவில் இருந்த நேரத்தில் தன்னுடைய குடும்பத்தில் இரண்டு பேர் மத்திய சிறையில் இருந்தபோதும்கூட தலைவர் கலைஞர் துணிச்சலாக, ஜூன் ஒன்றாம் தேதி இரவு, முரசொலி அலுவலகத்திற்கு, முரசொலி செல்வம் அவர்களுடன் சென்று, அவரே உட்கார்ந்து இரவெல்லாம் அச்சு கோர்த்து, துண்டறிக்கை தயார் செய்து, அத்துண்டறிக்கையை கையில் எடுத்துக்கொண்டு அடுத்த நாள் ஜூன்2ஆம் தேதி காலை, கோபாலபுரத்திலிருந்து ஒரே காரில் அவரோடு நானும் வி.எம்.ஆர்.சபாபதி, அன்றைய மாவட்ட துணை செயலாளர் இராயபுரம் மனோகரன் உள்ளிட்ட 10 பேர்களை தனது காரில் ஏற்றிக்கொண்டு கிளம்பினார். நாங்கள் எல்லோரும் சென்சார் அலுவலகம் இருந்த சாஸ்திரி பவனுக்குத்தான் தலைவர் செல்கிறார் என்று நினைத்தோம். அண்ணா மேம்பாலம் அருகிலே கார் வந்தவுடன் வலது புறமாக திருப்பச் சொல்லி அண்ணா சிலையை நோக்கி காரை விடச் சொன்னார். அப்பொழுது, தான் தயாரித்த துண்டு பிரசுரத்தை தானே விநியோகம் செய்து கொண்டு அண்ணா மேம்பாலம் முதல் அண்ணா சிலை வரை காரில் சென்று அண்ணா சிலை அருகே கொடி பிடித்துக் கொண்டு நாங்கள் போராட்டம் நடத்தி குரல் எழுப்பத் தொடங்கினோம். வெயில் கொளுத்துகின்ற அந்த நேரத்தில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கொளுத்துகின்ற வெயிலிலே தலைவர் கலைஞரும் அவரோடு சேர்ந்து நாங்கள் எல்லாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில் காவல் துறையினர் எங்களை கைது செய்தனர்.

அப்பொழுது எங்கள் காருக்கு பின்னால், தனியே ஒரு காரில் எங்களை தொடர்ந்து வந்த அண்ணன் முரசொலி செல்வம், மு.க.அழகிரி, மு.க.தமிழரசு மற்றவர்களும் அந்த இடத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்ததை நாங்கள் பார்க்கவில்லை. தலைவர் அவர்களும் நாங்களும் கைது செய்யப்பட்டு, திருவல்லிக்கேணி டி1 காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நேரத்தில், எங்களுடன் அவர்களையும் சேர்த்து காவல் துறையினர் கைது செய்தனர்.

பொதுக்கூட்டமாக இருந்தாலும் மாநாடாக இருந்தாலும் ஆர்ப்பாட்டமாக இருந்தாலும் எப்பொழுதுமே ஆர்ப்பாட்டம் இல்லாமல் யாருக்கும் தெரியாமல் மக்களோடு மக்களாக கவனிக்கும் பழக்கமுடைய அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள், எங்கள் ஆர்ப்பாட்டத்தை பார்ப்பதற்காக அவர் நின்றிருந்த நேரத்தில் காவல்துறையினர் அவரையும் மு.க.அழகிரியையும் மு.க.தமிழரசையும், கலைஞர் வீட்டில் கலைஞருக்கு சேவகராக இருந்த செயல் மணி ஆகிய அனைவரையும் குண்டுக்கட்டாக கைது செய்து, அரைமணி நேரம் கழித்து அழைத்து வந்தார்கள். அதற்கு முன்பாக முரசொலி செல்வம் அவர்கள் உடல் நலக்குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மருத்துவமனையிலிருந்து வெளிவந்தவர் என்ற மனிதாபிமானம்கூட இல்லாமல் காவல்துறையினர் மிருகத்தனமாக நடந்து கொண்டனர்.

**அந்த காவல் நிலையத்தில் கலைஞர் இருந்தபோது, தன்னுடைய குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் கைது செய்து வருவதை அமைதியாக பார்த்துக் கொண்டிருந்த கலைஞர், கொஞ்சம் மௌனமாக இருந்துவிட்டு, சிரித்துக் கொண்டே “எங்கள் வீட்டில் இருக்கிற எல்லா ஆண்களையும் கைது செய்து விட்டார்கள். நான் இங்கே இருக்கிறேன், மாறனும், ஸ்டாலினும் மத்திய சிறையில் இருக்கிறார்கள். இப்போது செல்வத்தையும், அழகிரியையும் தமிழரசுவையும் காவல்துறையினர் கைது செய்து வந்து விட்டார்கள். இப்போது பார்த்தால் எங்கள் வீட்டில் உள்ள ஆண்கள் அனைவரும் சிறையில்தான் இருக்கிறார்கள். பெண்கள் மட்டும்தான் வீட்டில் இருக்கக்கூடிய அளவுக்கு செய்து இருக்கிறார்கள்” என்று நாங்கள் எல்லாம் இருந்த வேதனையோடு இருக்கிற நேரத்தில் நகைச்சுவையாக, அவருக்கே உரிய பாணியில், சொன்னார்.**

அத்துடன், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, பரிதி இளம்வழுதி பேச்சை வெளியிட்டார் என்ற காரணத்திற்காக அண்ணன் முரசொலி செல்வம் அவர்களை தமிழ்நாடு சட்டப்பேரவை கூண்டில் ஏற்றினார். தமிழ்நாட்டு சட்டமன்ற வரலாற்றிலேயே அதற்கு முன்னால் கூண்டில் யாரும் ஏற்றப்பட்டதில்லை. முதன்முறையாக முரசொலி ஆசிரியர் என்ற முறையில் அண்ணன் செல்வத்தை கூண்டில் ஏற்றினார்கள். அந்நேரத்தில் எல்லோரும் நினைத்தார்கள் அண்ணன் செல்வம் அவர்கள் மன்னிப்பு கேட்டுவிட்டு வருவார் என்று. ஆனால் கலைஞருடைய ஆணையை ஏற்று, தைரியமாக கருப்பு சட்டை அணிந்து கொண்டு கூண்டில் ஏறிய அண்ணன் செல்வம் அவர்கள் “நான் ஒரு கருப்புச்சட்டைக்காரன், பெரியாருடைய வழியிலே வந்தவன், எதற்கும் அஞ்சாதவன்” என்று கம்பீரமாக கூண்டில் ஏறியவர்தான் முரசொலி செல்வம் அவர்கள்.

இப்படி அரசின் சார்பில் திமுகவினர் மீது போடப்பட்ட பல வழக்குகளானாலும் சரி, மற்ற வழக்குகள் ஆனாலும் சரி தான் வழக்கறிஞராக இல்லாவிட்டாலும், பலரை வழக்கறிஞராக உருவாக்கிய, இன்னும் சொல்லப்போனால் அவரால் சட்டக் கல்லூரியில் சேர்க்கப்பட்டவர்கள் பல பேர், அதுமட்டுமா, சிலர் நீதியரசர்களாககூட ஆனார்கள். அப்படிப்பட்ட அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் ஒரு வக்கீலாக பணியாற்றவில்லையே தவிர பல வழக்கறிஞர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்லுகிற மூத்த வழக்கறிஞர் போல் தான் அவர் பணியாற்றினார்.

**சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்ட நேரத்திலும் சரி திமுக கொடிக்கு பிரச்சினை வந்த நேரத்தில் ஏற்பட்ட வழக்காக இருந்தாலும் சரி டான்சி வழக்காக இருந்தாலும் சரி – கவர்னரிடத்திலே ஜெயலலிதாவின் மீது கொடுக்கப்பட்ட புகாராக இருந்தாலும் சரி, இவை எல்லாவற்றையும் உருவாக்கும் வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை கூறுகிற ஒரு மூத்த வழக்கறிஞர் போல்தான் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் பணியாற்றினார்கள்.**

கழகத்தின் நிகழ்வுகளையும் - கழக ஆட்சிக்கு எதிராக பேசுவோர்களுக்கு தான் மட்டுமே பதிலளித்து அதனை முரசொலியில் வெளிவர வேண்டும் என்ற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லாத அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் ஒருநாள் அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது எனக்கும் ஒரு உத்தரவு போட்டார். “நீங்கள் கழகத்தின் வரலாறு எல்லாம் விளக்கி சொல்கிறீர்கள், பேசுகிறீர்கள். ஆனால், ஏன் முரசொலியில் அவ்வரலாற்று நிகழ்வுகளை ஏன் கட்டுரையாக எழுத கூடாது” என்று அவர் சொன்னதின் அடிப்படையில்தான் முப்பெரும் விழாவினுடைய வரலாற்றை அவரிடத்திலே நான் சொன்னேன். அது கட்டுரையாக முரசொலியில் வெளிவந்தவுடன், “முரசொலியில் நீங்கள் எழுதிய கட்டுரை பார்த்தேன் ‘முப்பெரும் விழா’ பவள விழாவினுடைய வரலாறு” என்று. அதற்கு நான், “அந்த கட்டுரையை நீங்கள் சொல்லித்தான் எழுதினேன்” என்று சொன்ன போது, மகிழ்ச்சியடைந்து “தொடர்ந்து எழுதுங்கள்” என்று சொன்னார்.



**ஆர்.எஸ்.பாரதி,**
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

எங்கேயும் அநீதி நடைபெற்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் போலவே, அதனை தனது எழுதுகோல் எனும் ஆயுதத்தைக் கொண்டு கட்டுரைகளாகவும் பெட்டி செய்திகளாகவும் முரசொலியில் வெளியிட்டு தனது எதிர்ப்பை நாசூக்காக தெரிவிப்பார் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள்.

எடுத்துக்காட்டாய், சென்ற மாதம் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஒரு நீதியரசர் கழகத்தினுடைய மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தமிழக அரசு சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில் ஆஜராகி தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருந்த நேரத்தில் அவரை நோக்கி, அந்த நீதிபதி பயன்படுத்திய சில வார்த்தைகள் மூத்த வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சனை பெரிதும் காயப்படுத்தியது. அந்த வார்த்தைகள் நீதிபதியிடமிருந்து வந்ததால், ஒரு வழக்கறிஞருடைய மனம் எந்த அளவுக்கு காயப்படுத்தி இருக்கும் என்பதை சட்டத்துறை வல்லுநர்களுடனும் - மூத்த வழக்கறிஞர்களுடனும் பழகி வந்த அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் உணர்ந்த காரணத்தினால், அவர் கொதித்து எழுந்து உடனடியாக என்னிடத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ”அந்த நீதிபதி பேசியதையும், பிரச்சனை பற்றி பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் குறித்தும் பத்திரிகைகளில் வந்துள்ளதே பார்த்தீர்களா?” என்று என்னிடத்தில் கூறி மிகுந்த ஆதங்கப்பட்டார்.

நான் சொன்னேன் “அந்நிகழ்வு எல்லோரையும் காயப்படுத்தி இருக்கிறது. அந்நீதிபதி பயன்படுத்திய அந்த வார்த்தை என்பது மிகப் பெரிய வேதனையை அளிக்கிறது” என்று சொன்னபோது, அதை அப்படியே மற்றவர்கள் போல கேட்டுவிட்டு அப்படியே விட்டுவிடுவார் என்று நினைத்தேன். ஆனால், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் காயப்பட்டதைவிட நீதித்துறையின் மீதும் நீதிபதிகள் மீதும் வழக்குகள் மீதும் பல ஆண்டு காலமாக அவர் வழக்கறிஞர்களோடு பழகியிருந்த காரணத்தினால், ஒரு வழக்கறிஞரின் இதயம் காயப்பட்டதை விட பெரிதாகக் காயப்பட்டது அண்ணன் செல்வத்தினுடைய இதயம்தான் என்று கூறுவேன்.

**இதனை நான் ஏன் சொல்கிறேன் என்றால், எந்தளவிற்கு அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் இதயம் காயப்பட்டிருந்தால், பத்திரிகையாளராகிய அவர், தனது எழுதுகோல் எனும் ஆயுதத்தை பயன்படுத்தி, கடந்த 4.10.2024 அன்று “சிலந்தி” எனும் புனைப் பெயரில் “உச்சநீதிமன்றத்தின் எச்சரிக்கை; உயர் நீதிமன்ற நீதிபதிகள் கவனத்திற்கு!“ என்ற கட்டுரையை “முரசொலி”யில் எழுதினார். அந்த கட்டுரை படித்த மூத்த வழக்கறிஞர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் வழக்கறிஞர்கள் பலரும் என்னிடத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு “நீதித்துறை பற்றியும் நீதிமன்ற நடவடிக்கை பற்றியும் இப்படிப்பட்டதொரு சிறப்பான கட்டுரையை எழுதுவதற்கு கைதேர்ந்த எழுத்தாளர்களால் மட்டுமே முடியும். குறிப்பாக, அதில் மிக சிறந்த வகையிலே நீதிமன்றத்திற்கு அவமதிப்புக்குள்ளாகாமலும் யார் மனதும் புண்படாமலும், அதே நேரத்தில் சொல்ல வேண்டிய கருத்தினை அழுத்த திருத்தமாக சிறப்பாக ஒரு கட்டுரையை வடித்திருக்கிறார்” என்று சொல்லி பாராட்டினார்கள்.**

பல பேருக்கு, “சிலந்தி” என்ற புனைப் பெயர் கொண்ட கட்டுரையாளர் யார்? என்று தெரியாது. நான் “அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள்தான்” என்ற சொன்ன பிறகுதான் “அப்படியா?” என்று கேட்டு விட்டு மிகவும் பூரித்து வியந்து போனார்கள்.

4.10.2024 அன்று “உச்சநீதிமன்றத்தின் எச்சரிக்கை; உயர் நீதிமன்ற நீதிபதிகள் கவனத்திற்கு!“ என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை வெளிவந்த மறுநாள் காலை, அலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு “பாரதி எப்படி இருக்கிறது என் கட்டுரை” என்றும், “என்ன சொல்கிறார்கள்” என்று கேட்டார். அவர்தான் முரசொலி செல்வம். நான் யார்? என்னிடத்தில் எதற்காக கேட்க வேண்டும்? சிறுவனாக இருந்தாலும், வயதிலே அவரைவிட இளையவர்களாக இருந்தாலும், எந்தவொரு விஷயமாக இருந்தாலும் கேட்டு தெரிந்து கொண்டு எழுதுகிற ஆற்றலும் மனவளமும் கொண்ட பரந்த நல்ல இதயமும் அண்ணன் முரசொலி செல்வத்தை தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து.

“சுப்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்” என்று சொல்வார்களே, அது எந்த காலத்திலும் அவரிடத்தில் இருந்ததில்லை. சொல்லுகிற கருத்து சாதாரண தொண்டன் சொன்னாலும் சரி ரோட்டிலேயே போறவன் சொன்னாலும் சரி அது சரியாக இருந்தால் ஏற்றுக் கொண்டு, அதை கொண்டு போய், அன்றைய தலைவராக இருந்த கலைஞரிடமும் - இன்றைய தலைவர் முதல்வர் தளபதி அவர்களிடமும் கொண்டு சேர்க்கின்ற ஒரு “மக்களின் தூதுவராகவே” அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் இருந்தார். என்பது அவருடன் பழகியவர்கள் மட்டுமே அறிவர்.

**கடந்த 4.10.2024 அன்று “உச்சநீதிமன்றத்தின் எச்சரிக்கை; உயர் நீதிமன்ற நீதிபதிகள் கவனத்திற்கு!“ என்ற தலைப்பில் “சம நிலை தவறாது செயல்படக்கூடிய நீதிபதி அன்றைய தினம் உபயோகித்த பதப் பிரயோகங்களும், வழக்கறிஞர் திரும்பத் திரும்ப பணிவுடன் தனது வாதத்தை எடுத்து வைக்க வாய்ப்பு கேட்டிடும் போதும் அதனை கவனத்தில் கொள்ளாது வழக்கை நடத்திய விதமும் ஒரு தவறான முன்னுதாரணமாக ஆகிவிடக் கூடாது என்பதே அந்த வீடியோவைக் காணும்போது ஏற்படும் ஆதங்கம்! அனுபவ முதிர்ச்சியுள்ள அந்த நீதிபதியும் இதனை கருத்தில் கொள்வார் என்று எண்ணுகிறோம்” என்று அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் கட்டுரை எழுதினார். அவர் இக்கட்டுரை எழுதும்போது தனது இறுதிக் கட்டுரை இது தான் என்று அறியாமலேயே எழுதியிருக்கிறார்.**

அந்த கட்டுரையில் **“அனுபவ முதிர்ச்சியுள்ள அந்த நீதிபதியும் இதனை கருத்தில் கொள்வார் என்று எண்ணுகிறோம்”** என்று அவர் ஓங்கி எழுப்பிய எழுத்தின் குரல் தொடர்புடையவருக்கு எட்டியதோ இல்லையோ தெரியாது. ஆனால், அண்ணன் முரசொலி செல்வம் மறைந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, அதாவது 16.10.2024 அன்று மதுரை உயர் நீதிமன்ற அமர்வு அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் எண்ணத்தை தீர்ப்பாய் அளித்திருக்கிறது.

மதுரை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அண்ணன் முரசொலி செல்வத்தின் கருத்தை ஏற்றுக் கொண்டது போலவே, நீதிமன்றத்திலே அவர் வழக்கறிஞர் வில்சனுக்கு எதிராக சொன்ன சொல்லை பயன்படுத்திய வாசகங்களை வெளியிடக்கூடாது என்ற உத்தரவையும், எந்த நீதிபதி, கடினமான வார்த்தைகளை பயன்படுத்தினாரோ, அதே நீதிபதி “அந்த வீடியோவை வெளியிடக்கூடாது” என்று தடை செய்தது மட்டுமல்ல, “அப்படி அந்த வீடியோவிலே வெளியிடுவதற்கு யார் யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று உத்தரவு போட்டிருக்கிறார். இந்தச் செய்தியை அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், அவர் எந்தளவுக்கு மகிழ்ச்சி அடைந்து இருப்பார். ஆனால், இந்த நீதிமன்ற தீர்ப்பை அறிந்திட அவர் இல்லையே என்று நினைக்கிறபோது மனம் மிகவும் வேதனை அடைகிறது.

“செத்தும் கொடுத்த சீதக்காதி” போல, தான் உயிரோடு இருந்தபோது அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய வரிகள், அவர் மறைந்து ஐந்து நாட்களாகிய பின்னர் அப்படியே நீதிமன்றத் தீர்ப்பாக வருகிறது என்றால், அவரது எழுத்தின் வலிமையை உணர்ந்து கொள்ளலாம்.

அண்ணன் முரசொலி செல்வத்திற்கு என் புகழ் அஞ்சலியையும் என் வீரவணக்கங்களையும் நான் மட்டுமல்ல, அனைத்து வழக்கறிஞர்களும் கழக வழக்கறிஞர்கள் மட்டுமல்ல வழக்கறிஞர் இனமே அவருக்கு வீரவணக்கம் செலுத்துகிற நாளாக நான் கருதுகிறேன்.

**நீடு வாழ்க!**
**அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் புகழ்!**

### 4.10.2024 அன்று ‘முரசொலி’யில் முரசொலி செல்வம் அவர்களின் எண்ணம் கட்டுரையாய்



தேவை என்பதை உச்சநீதிமன்றமே அறிவுறுத்தியுள்ளதை மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமீபத்தில் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர், நீதிமன்றத்தில் ‘யா…யா’ (ya yo) என்ற வார்த்தையை பயன்படுத்தியபோது. ‘What is this ya ya’ this not coffee Shop. **அதாவது என்ன இது “யா… யா” இது காபி ஷாப் அல்ல** என உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி குறிப்பிட்டது ஏடுகளில் வெளிவந்துள்ளது. ‘ya ya’ (யா…யா) என்பது Yes Yes (எஸ்…எஸ்) என்பதற்கு மாற்றாக வழக்குச் சொல்லாக மாறி அப்படி

servations reflect
ust be careful: SC

ஆனால் மதுரை அமர்வில் இருந்த அந்த நீதிபதி வழக்கறிஞரை நோக்கி, ‘You Guys’ **(யூ கைஸ்)** என்ற வார்த்தைகளை பிரயோகித்துள்ளது அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது!

**உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி. நீதிமன்றத்தில் “யா… யா….” என்று கூறியபோது இது காபிஷாப் அல்ல என்று வழக்கறிஞரை எச்சரித்தாரோ.**

சிலந்தி

சமநிலை தவறாது செயல்படக்கூடிய நீதிபதி அன்றைய தினம் உபயோகித்த பதப்பிரயோகங்களும், வழக்கறிஞர் திரும்பத்திரும்ப பணிவுடன் தனது வாதத்தை எடுத்து வைக்க வாய்ப்பு கேட்டிடும் போதும் அதனை கவனத்தில் கொள்ளாது வழக்கை நடத்திய விதமும் ஒரு தவறான முன்னுதாரணமாக ஆகிவிடக்கூடாதுஎன்பதே அந்தவீடியோவைக் காணும் போது ஏற்படும் ஆதங்கம்! **அனுபவ முதிர்ச்சியுள்ள அந்த நீதிபதியும் இதனை கருத்தில் கொள்வார் என எண்ணுகிறோம்.**

### 16.10.2024 அன்று ‘இந்து’ ஆங்கில இதழில் மதுரை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தீர்ப்பு - எண்ணத்தின் செயல் வடிவம்



THE HINDU

Tamil Nadu

**HC expunges remarks against senior advocate Wilson; probe into circulation of video begins**

Court says a complaint on the illegal videographing of court proceedings has been forwarded to the Computer Committee; the Cyber Crime Police has been asked to stop broadcast of the video

The Hindu Bureau
MADURAI

The Madurai Bench of the Madras High Court on Tuesday expunged certain remarks made by a judge in the open court against senior advocate P. Wilson.

Besides, it said that a complaint with respect to an illegally recorded and edited video of court proceedings (pertaining to the incident), which was being circulated on social media, had been forwarded to the Computer Committee. The Cyber Crime Police had launched an investigation into the matter.

A Division Bench of Justices R. Subramanian and L. Victoria Gowri told advocates that they would find out who recorded the video, in a few days. A request was already made to the Cyber Crime Police to stop the broadcast of the video, the court said.

Advocate V. Panneer Selvam had written to the Additional Registrar General of the Madurai Bench of the Madras High Court, lodging a complaint over the illegally recorded and edited video of the court proceedings being circulated on social media.

He pointed out that a partially edited and tampered video of the court proceedings, pertaining to appeals heard by Justices Subramanian and Victoria Gowri, was being circulated to advocates on social media with comments demeaning the court, senior counsel and counsel who appeared in the case. It should be taken down, and action should be taken against those who recorded and uploaded it, he said. Video recordings of court proceedings are prohibited in accordance with the Madras High Court Video Conferencing in Court Rules, 2020. The Clause 3.9.4 of the Rules stated “that no person shall record the judicial proceedings at the court site save and except an officer of court duly authorised in that regard”, he submitted.

**Statements in support**

Earlier, during the course of the hearing on September 26, the court made certain observations against Mr. Wilson who was appearing for the Tamil Nadu Public Service Commission. Several Bar Associations had issued statements in support of the senior counsel.

The court expunged the observations made against Mr. Wilson, and the Registry was directed to place the matter before another Division Bench on the orders of the Chief Justice.

**Thorough probe:** A Division Bench of Justices R. Subramanian and L. Victoria Gowri told advocates that they would find out who recorded the video, in a few days. FILE PHOTO